டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 13.11.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 119 - Madurai | Online Edition

# தமிழ்நாடு பல்லுயிர் பெருக்க வாரியத்திற்கு ரூ.16,79,482 விடுவிக்கப்பட்டுள்ளது

புது தில்லி, நவ.12

தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் மாநிலங்களுக்கு ரூ.43.22 லட்சம் மதிப்பிலான காப்புரிமையுடன் கூடிய அணுகல் மற்றும் பயன் பகிர்வு நிதியை விடுவித்துள்ளது. இந்திய உயிரியல் வளங்களை பயன்படுத்தி காப்புரிமைகளை பெறுவதற்கும், புதுமை கண்டுபிடிப்புகளை வர்த்தக மயமாக்குவதற்கும், அறிவுசார் சொத்துரிமை பயன்பாடுகளிலிருந்து இந்த நிதி உருவாக்கப்பட்டது.

ஆந்திரப் பிரதேசம், சத்தீஸ்கர், கோவா, குஜராத், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, பஞ்சாப், தமிழ்நாடு, தெலங்கானா, உத்தரப் பிரதேசம், உத்தராகண்ட் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய 16 மாநிலங்களின் பல்லுயிர் பெருக்க வாரியங்களுக்கு இந்த நிதி வழங்கப்படுகிறது.

அந்த வகையில், தமிழ்நாட்டிற்கு ரூ.16,79,482 வழங்கப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசத்திற்கு ரூ.20,66,553-ம், ஒடிசாவிற்கு ரூ.2,09,965-ம், உத்தரப் பிரதேசத்திற்கு ரூ.91,500-ம், மத்தியப் பிரதேசத்திற்கு ரூ.79,547-ம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்தொகை பல்லுயிர் மேலாண்மை குழுக்களுக்கு பரிமாற்றம் செய்யப்பட்டவுடன் பல்லுயிர் பாதுகாப்பு, நீடித்த வள மேலாண்மை மற்றும் சமூக அடிப்படையிலான வாழ்வாதாரத்தை வலுப்படுத்துதல் ஆகியவற்றை ஆதரிக்கும்.

இதில் மக்களின் பல்லுயிர் பெருக்க பதிவுகளை உருவாக்குதல் மற்றும் புதுப்பித்தல், பாரம்பரிய முறைகளை ஆவணப்படுத்துதல் மற்றும் இதர உள்ளூர் பாதுகாப்பு முன்முயற்சிகள் போன்ற நடவடிக்கைகளும் அடங்கும்.

# சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் சரக்கு ரெயிலில் வருகை

## வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, நவ.12

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு, சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் 1304 மெட்ரிக் டன்கள் தூத்துக்குடியில் இருந்து சரக்கு இரயிலில் புதுக்கோட்டை வந்தடைந்தது என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் சம்பா நெல் சாகுபடிக்கும், ஏற்கனவே பயிரிட்டுள்ள மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, தென்னை, கரும்பு மற்றும் தோட்டக் கலைப் பயிர்கள் ஆகிய பயிர்களுக்கும் தேவையான உரங் களான யூரியா 2821 மெட்ரிக் டன்கள், டிஏபி 1144 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 1261 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 5359 மெட்ரிக் டன்கள் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 696 மெட்ரிக் டன்கள் ஆகியவை மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாரங்களிலும் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் தனியார் சில்லரை விற்பனை நிலையங்கள் ஆகிய வற்றில் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப் பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தேவையான உர விநியோகத் திட்ட இலக்கீட்டின்படி உர நிறுவனங்களிடமிருந்து உரங்கள் பெறப்படுவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்களான யூரியா உரம் 603 மெட்ரிக் டன்களும், டிஏபி 255

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மெட்ரிக் டன்களும், காம்ப்ளக்ஸ் உரம் 382 மெட்ரிக் டன்களும், சூப்பர் பாஸ்பேட் உரம் 64 மெட்ரிக் டன்களும் தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்திலிருந்து சரக்கு இரயில் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வரப்பெற்றது. இதில் 463 மெட்ரிக் டன் யூரியா, 185 மெட்ரிக் டன் டிஏபி, 322 மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரம், 54 மெட்ரிக் டன் சூப்பர் பாஸ்பேட் உரம் ஆகியன புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளுக்கு விவசாயிகள் பயன் படும் வகையில் அனுப்பி வைக்கப்படுவதை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சி.முகமது ரபி, ஸ்பிக் உர நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் உடன் இருந்தனர். மீதமுள்ள உரங்கள் சிவகங்கை மாவட்டத் திற்கு உர நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்டது.

மேலும், மாவட்டத்தில் யூரியா உரத்தின் இருப்பு, விற்பனை, கொள்முதல் மற்றும் உர நகர்வு குறித்து சிறப்பு பறக்கும்படை மூலம் அவ்வப்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதனால், உர விற்பனையாளர்கள் விதி மீறல்களில் ஈடுபடுவது கண்டறியப் பட்டால் உரக்கட்டுபாட்டு ஆணை 1985 இன்படியும் மேலும், உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 இன்படியும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

மொத்த உர விற்பனையாளர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் பிற மாவட்டங்களுக்கு உரங்களை அனுப்பிடவோ, பிற மாவட் டங்களிலிருந்து கொள்முதல் செய்வதோ கூடாது. உர உரிமத்தில் அனுமதி பெறாத இடங்களில் இருப்பு வைப்பதும், உரங்களை விற்பனை செய்வதும் கண்டறியப்பட்டாலும் உர இருப்பு மற்றும் ஊணநுறீ இயந்திரத்திலுள்ள இருப்பு விவரத்தில் ஏதேனும் வேறுபாடு இருந்தாலும் உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985-இன்படி உர உரிமம் இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அதிக விளைச்சல் பெற விதை பரிசோதனை செய்வீர்!

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் நல்ல விளைச்சல் பெற்றிட விதைகளை விதைக்கும் முன் தங்களிடம் உள்ளது நல்ல தரமான விதை தானா என கண்டறிந்து பின்னர் விதைப்பதே மிகவும் சிறந்தது.


நல்ல முளைப்பு திறனும், தூய்மையும் கொண்ட விதைகளை விதைப்பதன் மூலம் நல்ல மகசூல் பெற இயலும். நல்ல முளைப்பு திறன் கொண்ட விதைகள் அதிக வீரியம் உடைய தாகவும், அதிகளவில் உற்பத்தி திறன் கொண்டதாகவும் இருப்பதால் வயலில் இடப்படும் உரங்கள் மற்றும் பாய்ச்சப்படும் நீர் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு அதிக விளைச்சலை பெற முடியும்.

எனவே விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் அனைவரும் தங்களிடம் இருக்கும் விதைகளை தரமானது தானா என பரிசோதனை செய்து பயன்படுத்திட வேண்டும். மேலும் விதை பரிசோதனை செய்ய விதை மாதிரியுடன் விதை பரிசோதனைக்கான கட்டணம் ரூ.80/- செலுத்த வேண்டும்.

விதை மாதிரி அனுப்ப வேண்டிய முகவரி : மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், 15, காளியம்மன் கோவில் தெரு, நாகப்பட்டினம் -611001.

விதை மாதிரியுடன் விதை மாதிரியின் பயிர், இரகம், குவியல் எண் மற்றும் தேவைப்படும் பரிசோதனை ஆகியவற்றுடன் அனுப்புநர் பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண்ணுடன் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ விதை மாதிரியுடன் கொடுத்து பயன் பெறுமாறு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் அ.அமுதாதேவி, செ.பிரசன்னா தெரிவித்துள்ளனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு முறைகள் பற்றி பயிற்சி மற்றும் புகையிலை தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு



ஈரோடு, நவ.12

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டாரம், சுண்டக் காம்பாளையம் கிராமத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை மூலம் ஆத்மா திட்டத்தின் கீழ் செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி மற்றும் ஈரோடு மாவட்ட புகையிலை தடுப்பு மையம் மூலம் விழிப்புணர்வு முகாம் நம்பியூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மைராடா வேளாண்மை அறிவியல் மையத்தி லிருந்து கால்நடை மருத்துவர் கார்த்திக் கலந்து கொண்டு வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு பற்றி விவசாயி களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் ஈரோடு மாவட்ட புகையிலை தடுப்பு மையம் மூலம் புகையிலை தடுப்பு மற்றும் புகையிலையால் ஏற்படும் தீங்குகள் மற்றும் மாற்றுப் பயிர் சாகுபடி குறித்து விழிப்புணர்வு பயிற்சி புகையிலை தடுப்பு மையம் டாக்டர் கலைச்செல்வி மற்றும் டாக்டர் சங்கீதா நம்பியூர் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் மனோகர் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சியில் வேளாண்மை துறை திட்டங்கள் குறித்து துணை வேளாண்மை அலுவலர் வெங்கிடுசாமி, தோட்டக்கலை துறை திட்டங்கள் குறித்து உதவி தோட்டக்கலை அலுவலர் ஜனார்த்தனன் ஆகியோர் எடுத்துரைத்தனர். இப்பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை சுண்டக்காம்பாளையம் உதவி வேளாண்மை அலுவலர் மெய்யரசு மற்றும் தங்கராசன், உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆகியோர் செய்திருந்தனர்.







**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பிரான்சின் அக்ரோ இன்ஸ்டிடியூட் உடன் இணைந்து இந்திய - பிரான்ஸ் கருத்தரங்கம்




கோயம்புத்தூர், நவ.12

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் நோயியல் துறை மற்றும் பயிர் பாதுகாப்பு மையம், பிரான்சின் அக்ரோ இன்ஸ்டிடியூட் உடன் இணைந்து, தாவர நோய்கள், உணவுப் பாதுகாப்பு, மற்றும் உணவு கிடைப்புறுதி : ஒற்றை ஆரோக்கியத்திற்கான வழிகாட்டல், என்ற தலைப்பில் மூன்று நாள் இந்திய - பிரான்ஸ் சர்வதேச கருத்தரங்கம் நேற்று கோயம் புத்தூரில் தொடங்கியது.

இந்நிகழ்வுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தேர்வுத் தணிக்கையாளர் முனைவர் பாலசுப்ரமணி, தலைமை தாங்கினார்.

சிறப்பு உரையை புதுதில்லி இந்தோ-பிரான்ஸ் மேம்பட்ட ஆராய்ச்சி மைய இயக்குநர் முனைவர் நிதின் சேத் வழங்கினார். வரவேற்பு உரையில் பயிர் நோயியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அங்கப்பன், இந்தியா-பிரான்ஸ் இணை ஆராய்ச்சி முயற்சிகள் வேளாண் சவால்களை சமாளிக்க முக்கிய பங்கு வகிப்பதை வலியுறுத்தினார். முனைவர் செந்தில் ராஜா, இந்திய ஒருங்கிணைப்பாளர் மற்றும் முனைவர் ஃப்ரெடெரிக் ஹமெலின், பிரெஞ்சு ஒருங்கிணைப்பாளர் கருத்தரங்கத்தின் நோக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை விளக்கினர்.

இந்த கருத்தரங்கில் பிரான்சைச் சேர்ந்த 6 முக்கிய ஆராய்ச்சி-யாளர்கள், மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 25 முக்கிய ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்கின்றனர்.

இதனுடன், நூற்றுக்கணக்கான ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் இந்தியா முழுவதும் இருந்து கலந்து கொள்கிறார்கள். இந்த கருத்தரங்கம், தாவர நோய்த் தொற்றுகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவு கிடைப்புறுதி ஆகியவற்றை ஒற்றை ஆரோக்கியம் என்ற ஒருங்கிணைந்த பார்வையில் ஆராய்வதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மூன்று நாட்கள் நடைபெறும் கலந்துரையாடல்களில் தாவர ஆரோக்கிய மேலாண்மை, உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நலனுக்கான நிலைத்த தீர்வுகள் குறித்து ஆராயப்படும்.

ஊட்டி தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் கவிதா நன்றி உரையாற்றினார். இந்த இந்திய-பிரான்ஸ் கருத்தரங்கம், சர்வதேச ஆராய்ச்சி ஒத்துழைப்பை வலுப்படுத்தி, உலகளாவிய உணவு மற்றும் ஆரோக்கிய பாதுகாப்புக்கான அறிவியல் உரையாடலை ஊக்குவிக்கும் முக்கியமான நிகழ்வாகும்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# விருத்தாசலம் கேவிகேயில்

# தொழில்முனைவோருக்கான சந்தைப்படுத்துதல் பயிற்சி



கடலூர், நவ.12

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், தொழில் முனைவோருக்கான சந்தைப்படுத்துதல் பயிற்சி 12.11.25 அன்று நடைப்பெற்றது. இப்பயிற்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன் சிறப்புரையாற்றி பயிற்சியினை துவக்கி வைத்தார். நபார்டு வங்கியின் கிளை மேலாளர், சசிகுமார் மற்றும் ரகுராமன் மேலாளர், அமிகோ நிறுவனம் சென்னை, உணவு பொருள் மதிப்புக்கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை சார்ந்த விவசாயிகள் மற்றும் பல்வேறு தொழில்முனைவோர்கள் கலந்துக் கொண்டு தங்களது மதிப்பூட்டப்பட்ட பொருள்களை காட்சிப்படுத்தினர்.

இப்பயிற்சியில் சிறுதானியத்தில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள், பனைக்கிழங்கில் மதிப்பூட்டிய பொருட்கள், எபிசி மால்ட், சுருள் பாசி மாத்திரைகள், ஊறுகாய்கள், அவல், பாரம்பரிய அரிசி வகைகள், காளானில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள், பலா மற்றும் முந்திரியில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள், எண்ணெய் வகைகள் மற்றும் 150க்கும் மேற்பட்டபொருள்கள் காட்சிபடுத்தப்பட்டன. மேலும் முனைவர் சு.கண்ணன், முனைவர் மே.ப.சுகுமாறன், முனைவர் ஜெ.ஜெயக்குமார், கு.காயத்ரி மற்றும் க.கலைச் செல்வி கலந்துக் கொண்டனர்.

தொழில்முனைவோர்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவன உறுப்பினர்கள் தங்களது சந்தேகங்களை நபார்டு வங்கி மற்றும் தனியார் அமிகோ உணவு நிறுவனிடம் கேட்டு தெளிவு பெற்றனர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தைசேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# கடலில் விவசாயமா? அது சாத்தியமாகுமா? அது எப்படி?

நிலத்தில் மட்டுமல்ல கடலிலும் விவசாயம் செய்ய முடியும் என்பதை இராமநாதபுரம் மாவட்ட கடலோர பகுதி மீனவர்கள் சாதித்து காட்டி வருகின்றனர். அந்த வகையில் கடலில் கூண் டிற்குள் மீன் வளர்ப்பும் கடலுக்குள் மிதவை அமைத்து கடற் பாசி வளர்க்கவும் மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம்




(CMFRI) மீனவர்களுக்கு பயிற்சி அளித்து இன்று ஆயிரக்கணக்கான அளவில் வருமானம் பெறக் கூடியவர்களாக மாற்றியுள்ளது குறிப்பிடதக்கது.



**1) கடல் கூண்டிற்குள் மீன் வளர்ப்பு**

**இதுவும் கடலில் நடக்க கூடிய விவசாயமே.**

கடற்கரையிலிருந்து குறைந்த பட்சமாக 100 மீட்டரிலிருந்து, அதிக பட்சமாக 2 கி.மீ வரை கடலில் கூண்டு (ரூபுறூசி) அமைத்து இதற்காக 6 மீட்டர் சுற்றளவு கொண்ட மிதவை கூண்டை இரும்பு மற்றும் பாலி எத்திலினால் கொண்டு அமைக்க வேண்டும். இதன் நடுவில் 7 மீட்டர் கடலுக்குள் மூழ்கிய நிலையில், வலை அமைக்க வேண்டும்.

**என்ன என்ன மீன்கள் வளர்க்கலாம்?**

கோபியா, கொடுவா மீன்களை வளர்க்கலாம்.

**வளர்ப்பது எப்படி?**

ஒரு கூண்டிற்குள் 25 கிராம் எடையுள்ள அதிக பட்சமாக 1000 குஞ்சுகளை விடலாம். மீன் குஞ்சுகளுக்கு உணவாக சிறிய பாசி புழுக்கள் சிறிய ரக மீன் குஞ்சுகளை கொடுக்கலாம். ஓவ்வொரு மீனும் 10 மாதத்தில் 1 முதல் 2 கிலோ வரை எடையுள்ளதாக மாறும். 10 மாதங்களில் ஒரு கூண்டிற்குள் ஒரு டன் எடையுள்ள மீன் மகசூல் கிடைக்கும். கூண்டு செலவு போக சுமார் 2 லட்சம் லாபம் வருமானமாக கிடைக்கும்.

கோபியா மீன் களுக்கு கொடுவாய் மீனைவிட கிராக்கி அதிகமாக உள்ளது. புரத சத்து நிறைந்த இந்த மீன்களை வெளிநாட்டினர் போட்டி போட்டுக்கொண்டு வாங்குவதால் இதற்கான விற்பனை வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

கொடுவா மீன்களும் சில சமயங்களில் நல்ல விற்பனை வாய்ப்புள்ளது.

**2) கடற்பாசி வளர்ப்பு**

இன்றைய கால கட்டத்தில் கடற்பாசியின் தேவை நாளுக்கு நாளாக அதிகரித்து வருகிறது. இயற்கை விவசாயத்தில் கூட இதனை வளர்ச்சி ஊக்கியாக பயன்படுத்தப்படுகிறது. உணவு மதிப்புக்கூட்டப்பட்ட பொருள் மற்றும் ஊறுகாய் ஐஸ்கிரீம் பால் பொருட்களில் நறுமண தயாரிப்பு போன்றவற்றில் அதிகமாக பயன்படுத்திட உள்ளனர்.

**கடற்பாசி வளர்ப்பு**

மீனவர்களுக்கு கடலில் விவசாயம் செய்ய ஏற்ற தொழி லாகவும் கூடுதலான வருமானமாக தரக்கூடிய தொழிலாகவும் கடற்பாசி உள்ளது.

ஒருங்கிணைந்த பண்ணை முறையில் மீன் வளர்ப்புடன் கடற்பாசி வளர்ப்பும் சேர்த்து விவசாயமாக கடலில் செய்யலாம். மூங்கில் கழிகளை சதுர அல்லது செவ்வக வடிவில் மிதவை களாக செய்து கடலில் மிதக்க விட வேண்டும். அவற்றை பனை நார் நைலான் கயிறுகளால் இருக்கமாக கட்ட வேண்டும். இந்த மிதவைகளை கடலில் கல் நங்கூரத்துடன் இணைத்து மிதக்க வேண்டும். ஒரு கிலோ 'கடப்பா பைக்கஸ்' என்ற கடற்பாசியை கடலில் கயறுயுடன் கட்டி போடும் போது அவை 1-2 மாதங் களில் 10 கிலோ வரை வளர்ந்து மகசூல் தரக்கூடியதாக உள்ளது.

காயவைக்கப்பட்ட கடற்பாசி ஒரு கிலோ 100லிருந்து 120 வரை விற்பனை செய்யப்படுகிறது. வியாபாரிகளே தேடு வந்து வாங்குகின்றனர். மாதம் ஒன்றுக்கு சாரசரியாக 300 கிலோ வரை கடற்பாசி உற்பத்தி செய்யலாம்.

மீன்பிடி தடைக்காலம் பருவ மழை காலங்களில் வேலை வாய்ப்பின்றி தவிக்கும் மீனவர்களுக்கு வாழ்வாதார தொழிலாக கடல் விவசாயம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்க தகவலாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சிறந்த விவசாயிகள் நடைமுறைகள் குறித்த பண்ணை பள்ளி பயிற்சி




சிவகங்கை, நவ.12

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், பிரான்பட்டி வருவாய் கிராமத்திற்க்குட்பட்ட கணபதிபட்டி கிராமத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் விரிவாக்க சீரமைப்பு திட்டம் அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனையின்படி வேளாண்மை உதவி இயக்குநர் பிரியா பொன் காயத்திரி மூலம் நடத்தபட்டது. இப்பயிற்சிக்கு வேளாண்மை அறிவியல் நிலையம், குன்றக்குடி இணை பேராசிரியர் செல்வராஜ், கலந்து கொண்டு நெல்லில் விதை தேர்வு செய்யும் முறை பற்றிய தொழில் நுட்பம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். வேளாண்மை உதவி இயக்குநர் பிரியா பொன் காயத்திரி அருவலர்கள் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நெல்லின் சிறந்த நடைமுறைகள் பற்றிய தொழில்நுட்பம் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வேளாண்மை அலுவலர் ப.கார்த்திகா பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நிலம் தேர்வு செய்தல் மற்றும் விதை தேர்வு செய்யும் முறைகள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர், முருகேசன் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நாற்றாங்கால் பராமரிப்பு முறைகள் பற்றியும் அதன் தொழில்நுட்பம் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்கசெல்வி, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு விதை நேர்த்தி செய்யும் முறை பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறி செயல்விளக்கம் செய்து காண்பித்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் ம.விஜய் ஆனந்த் பயிற்சிக்கு உண்டான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மக்காச்சோளப் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம்



மதுரை, நவ.12

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் எம்.புதுப்பட்டி கிராமத்தில் மக்காச்சோளப் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெ.சந்திரகலா, வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விரிவாக கூறினார். மேலும் தொழில்நுட்ப செயலாளர் பத்மபிரியா, மக்காச்சோளப் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த தொழில்நுட்பங்களான பயிரிட தகுந்த பருவம், நிலத்தேர்வு, நிலம் தயாரிப்பு, விதையளவு, விதைநேர்த்தி, விதைப்பு, நீர் பாசன முறைகள், உரமிடல் முறைகள், நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை கண்டறிதல், நுண்ணூட்ட உரமிடல், களை நிர்வாகம், பூச்சிக் கட்டுப்பாடு, நோய் கட்டுப்பாடு குறித்து விரிவாக விளக்கினார். மேலும் மக்காச்சோளப் பயிரை தாக்கும் படைப்புழுவினை கட்டுப்படுத்தும் முறைகளான கடைசி உழவின் போது ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடுதல், 1 கிலோ விதைக்கு சயண்ட்ரானிலிப்ரோல் + தயாமீதாக்சம் என்ற இரண்டு மருந்தின் கலவையை வைத்து விதை நேர்த்தி செய்தல், வரப்பு பயிராக சூரியகாந்தி, எள், தட்டைப்பயிறு, சாமந்தி போன்ற ஏதாவது ஒன்றை பயிரிடுதல், இனக்கவர்ச்சி பொறிகள் எக்டருக்கு 12 எண்கள் வைத்தல் போன்ற முன்னேற்பாடுகளை செய்ய விவசாயிகளுக்கு கூறினார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் உமா மகேஸ்வரி, இம்முகாமில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் மற்றும் வழங்கப்படும் இடுபொருட்கள் குறித்து கூறி நன்றி தெரிவித்தார். முகாமிற்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் இந்திரா தேவி செய்திருந்தார்.

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



தேனி, நவ.12

தேனி மாவட்டம், மேமங்கலம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இப்கோ கள அதிகாரி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பல்வேறு பயிர்களில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, நானோ ஜின்க், நானோ காப்பர், சாகரிகா மற்றும் இதர உரங்களின் பயன்பாடு குறித்து விளக்கினார். நானோ உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி செலவு குறைந்து, மண் வளம் பாதுகாக்கப்படும் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

மேலும், இரசாயன உரங்களின் அதிகப் பயன்பாடு மண் மாசுபாடு மற்றும் மண்வள குறைவை ஏற்படுத்தும் என்றும், அதற்கான சிறந்த மாற்றாக நானோ உரங்களை பயன் படுத்தலாம் என்றும் வலியுறுத்தினார். துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிக்க இப்கோ கிசான் ட்ரோன் சேவையை பயன்படுத்தலாம் என்றார். நானோ உரங்களுடன் வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் கலந்து தெளிப்பதன் மூலம் இடுபொருள் செலவுகளை குறைக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பின்னர், இப்கோவின் சங்கட ஹரன் பீமா யோஜனா திட்டத்தை அறிமுகப்படுத்தி பேசினார். இத்திட்டத்தின் கீழ் நானோ உரங்கள் வாங்கும் விவசாயிகள் ரூ.2 லட்சம் வரை இலவச விபத்து காப்பீடு பெறலாம் என்றார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மரபணு வரிசைப்படுத்துதல் தரவு பகுப்பாய்வு குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், நவ.12

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தகவலியல் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையம் சார்பில், வென்ச்சர் கேப்பிட்டல் திட்டத்தின் கீழ் மரபணு வரிசைப்படுத்துதல் தரவு பகுப்பாய்வு குறித்த பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 11.11.25 முதல் 14.11.25 வரை நடைபெறுகிறது.



இந்நிகழ்வில் இந்தியாவின் பல்வேறு நிறுவனங்களில் இருந்து பங்கேற்பாளர்கள் கலந்து கொள்கின்றனர். இப்பயிற்சியில் மரபணு பொறியியல், உயிரி தொழில்நுட்பம், தாவர இனப் பெருக்கம் மற்றும் மரபியல், வேளாண்மை மற்றும் நுண்ணுயிரியல் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த 16 பங்கேற்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

வரவேற்புரையை தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவலியல் துறைத் தலைவர் முனைவர் எல்.அருள் வழங்கினார். இந்த பயிற்சி நிகழ்ச்சியின் நோக்கம் மற்றும் வளர்ந்து வரும் மரபணு வரிசைப்படுத்துதல் தரவு பகுப்பாய்வு தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். பின்னர் பங்கேற்பாளர்களின் அறிமுகம் நடைபெற்றது. தொடக்க உரையை முனைவர் என்.செந்தில், இயக்குனர், CPM B&B வழங்கினார்.

தனது உரையில், மரபணு அறிவியல் தொடர்பான தரவுகள் மிக வேகமாக அதிகரித்து வரும் நிலையில், மேம்பட்ட மரபணு வரிசைப்படுத்துதல் தொழில் நுட்பங்களையும் அவற்றின் விளக்கங்களையும் கற்றுக் கொள்ளுதல் அவசியம் என்பதை வலியுறுத்தினார். முனைவர் R.ரவிகேசவன், இயக்குனர், CPBG, உரையாற்றி வாழ்த்துத் தெரிவித்தார். மரபணு வரிசைப் படுத்துதல் தரவு பகுப்பாய்வு தொழில் நுட்பத்தின் அருமை, அதன் பரவலான பயன்பாடுகள் மற்றும் அது வழங்கும் நவீன அறிவியல் முன்னேற்றங்களை உண்மையான உலக உதாரணங்களுடன் அவர் விளக்கினார்.




# கறவை மாடுகள் பராமரிப்பில்

# செய்ய வேண்டியவை / தவிர்க்க வேண்டியவை

பண்ணையில் கறவை மாடுகளின் பராமரிப்பு முறையானது அதன் பால் உற்பத்தி, இனப்பெருக்கம் மற்றும் உடல்நலத்தைக் தீர்மானிக்கிறது. கறவை மாடுகளுக்கு கொட்டகை மேலாண்மை, தீவன மேலாண்மை, இனப்பெருக்க மேலாண்மை, நோய் மேலாண்மை, மற்றும் தினசரி பண்ணை பராமரிப்புகள் ஆகிய வற்றில் தகுந்த கவனம் செலுத்தும் பொழுது கறவை மாடுகள் ஆரோக்கியமாக இருந்து அதிக பால் உற்பத்தியுடன் நல்ல வருமானத்தை வழங்கும். அதற்கு கறவை மாடுகள் பராமரிப்பில் செய்ய வேண்டியவையும், தவிர்க்க வேண்டியவையும் தெரிந்து கடைபிடிக்க வேண்டியது அவசியமாகிறது.

## செய்ய வேண்டியவை

### கொட்டகை மேலாண்மை

மாடுகளுக்கான கொட்டகையானது போதுமான இடவசதி, வெளிச்சம் மற்றும் நல்ல காற்றோட்டம் கொண்டதாக இருக்க வேண்டும்.

கொட்டகையானது தண்ணீர் தேங்காதவாறு தரையிலிருந்து சிறிது உயரமாகவும் மழைச் சாரல் கொட்டகைக்குள் விழாத வாறும் அமைக்கப்பட வேண்டும். ஒருமாட்டிற்கு 55-60 சதுர அடி இடம் தேவை. கோட்டகையைச் சுற்றிலும் நல்ல நிழல் தரும் மரங்களை வைப்பதன் மூலம் கோடையில் கொட்டகையானது குளிர்ச்சியாக இருக்கும். மேலும் கொட்டகையின் தரையானது மாடுகள் வழுக்கி விழாதவாறு சொரசொரப்பானதாக அமைக்க வேண்டும்.

### தீவன மேலாண்மை

மாடுகளுக்கு தினமும் அவற்றின் பால் கறவை, சினை நிலை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு கலப்புத்தீவனம், பசுந் தீவனம், உலர்தீவனம், உப்பு மற்றும் தாது உப்புக்கலவை ஆகியவற்றை போதுமான அளவு வழங்குவதன் மூலம் மாடுகள் ஆரோக்கியத்துடனும், நோய் எதிர்ப்பு சக்தியுடனும், நல்ல உற்பத்தித் திறனுடனும் இருக்கும். தீவனமானது கெட்டுப் போகாததும், பூஞ்சைக் காளான் பாதிப்பற்றும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும்.

கறவையிலிருக்கும் மாட்டிற்கு ஒரு லிட்டர் பால் கறவைக்கு 350 கிராம் என்றளவில் கலப்புத் தீவனம், 15 முதல் 25 கிலோ பசுந்தீவனம் மற்றும் 5 கிலோ உலர்தீவனம் கொடுக்க வேண்டும்.

சினையுற்ற மாட்டிற்கு 8 மாத சினைக்குப் பிறகு 2.5 கிலோ கலப்புத் தீவனம், 15 கிலோ பசுந்தீவனம் மற்றும் 5 கிலோ உலர் தீவனம் கொடுக்க வேண்டும். பால் கறவை மற்றும் சினையி லில்லாத மாட்டிற்கு 1.5 கிலோ கலப்புத் தீவனம், 15 கிலோ பசுந் தீவனம் மற்றும் 5 கிலோ உலர் தீவனம் கொடுக்க வேண்டும். மாடுகள் எந்த நிலையில் இருந்தாலும் தினமும் 30 முதல் 50 கிராம் வரை தாது உப்புக்கலவை மற்றும் 30 முதல் 50 கிராம் வரை உப்பும் தினமும் தீவனத்தில் கலந்து தர வேண்டும்.

**தூய்மையான குடிநீர் வழங்குதல்**

ஒரு கறவை மாட்டிற்கு நாளுக்கு குறைந்தபட்சம் 50 லிட்டர் வரை தண்ணீர் தேவைப்படும். கறவை மாடுகளுக்கு எப்போதும் தூய்மையான, குளிர்ந்த குடிநீர் கிடைக்குமாறு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். குடிநீரில் கழிவுகள் கலந்து இருப்பது அல்லது பழைய நீரை கறவை மாடுகளுக்கு கொடுக்க நேர்ந் தால் நோய்கள் ஏற்படலாம். வாரம் ஒரு முறை தண்ணீர் தொட்டி களை சுத்தம் செய்தல் முக்கியம் மற்றும் மாதம் ஒரு முறை தண்ணீர் தொட்டிகளுக்குள் சுண்ணாம்பு அடிப்பதன் மூலம் பச்சைப்பாசி பிடிக்காமல் தண்ணீர் தொட்டிகளை பாதுகாக்க வேண்டும். தண்ணீர் தொட்டிகளுக்குள் மர இலைகள் மற்றும் தூசிகள் கலக்காதவாறு தகுந்த மூடிகள் போட்டு வைக்க வேண்டும்.

**இனப்பெருக்க மேலாண்மை**

மாடுகள் 21 நாட்களுக்கு ஒரு முறை சினைப்பருவ அறிகுறி களைக் காட்டும். மாடுகளை காலை மற்றும் மாலை வேளை களில் நேரம் செலவழித்து சினைப்பருவ அறிகுறிகள் தென்படு கின்றதா என்பதைக் கவனித்து தக்க சமயத்தில் செயற்கை முறை கருவூட்டல் செய்ய வேண்டும். கருவூட்டல் செய்த நாளை குறித்து வைத்துக் கொண்டு 21 நாட்கள் கழித்து சினைப்பருவ அறிகுறிகள் ஏதும் தென்படுகின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும். சினைப்பருவ அறிகுறிகள் தென்படவில்லை எனில் மாடுகள் சினைப்பட்டிருக்கும் என்பதை அறிந்து அடுத்த 21 நாட்கள் கழித்து சினைப் பரிசோதனை செய்து மாடுகள் சினை யில் இருப்பதை ஊர்ஜிதம் செய்து தனியாக வைத்து தீவனம் கொடுப்பதிலும் பராமரிப்பு முறைகளிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

மாடுகளை பராமரிப்பவரும், பால் கறப்பவரும் தினமும் குளித்து துவைத்த சுத்தமான ஆடைகளை உடுத்த வேண்டும். பண்ணையையும் பண்ணையைச் சுற்றிலும் ஒருநாள் விட்டு ஒரு நாள் கிருமி நாசினி தெளிக்க வேண்டும்.

### பதிவேடுகள் பராமரிப்பு

இலாபகரமான கறவை மாட்டுப் பண்ணைக்கு பண்ணையில் பதிவேடுகள் பராமரிப்பு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். பண்ணையிலுள்ள மாடுகள், கன்றுகள், கிடேரிகள் ஆகிய வற்றின் எண்ணிக்கை, தீவனம் வாங்குதல் மற்றும் பயன்பாடு குறித்த தகவல்கள், தடுப்பூசிகள், குடற்புழு நீக்கம் செய்த நாட்கள், மாடுகளுக்கு வழங்கிய சிகிச்சை பற்றிய தகவல்கள், பால் உற்பத்தி, செயற்கை முறை கருவூட்டல் விவரங்கள், கன்று ஈன்ற விவரங்கள், வரவு செலவு கணக்குகள் போன்றவற்றை தவறாது குறித்து வைத்து அவ்வப்பொழுது சரி பார்க்கும் பொழுது பண்ணை இலாபகரமாக நடக்கின்றதா, பண்ணையின் நிலைமை ஆகியவற்றை தெரிந்து தகுந்த முன்னெச்செரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

### மாடுகளை அணுகுமுறை

மாடுகளை அமைதியாக, பயமின்றி அணுக வேண்டும். மாடு, கன்றுகளையும் எதற்காகவும் அடிக்கக்கூடாது. மாடுகளை அதிக சத்தமில்லாத இடத்தில் வைத்துப் பராமரிக்க வேண்டும்.

### தவிர்க்கவேண்டியவை

மாடுகளுக்கு கெட்டுப்போன மற்றும் பூஞ்சை பிடித்த தீவனம் கொடுக்கக்கூடாது. மாடுகளுக்கு அரிசி மற்றும் அரிசி சம்பந்தப் பட்ட தீவனங்களை அதிகமாகக் கொடுக்கக்கூடாது. அசுத்தமான மற்றும் கழிவுநீர் கலந்த தண்ணீரை மாடுகளுக்கு குடிக்கக் கொடுக்கக் கூடாது. மாடுகளை கொட்டகையில் போதுமான இடவசதி கொடுக்காமல் நெருக்கமாக வைக்கக்கூடாது.



காற்று வசதி வெளிச்சம் இல்லாத இடத்தில் மாடுகளை வைக்கக்கூடாது. சினை மாடுகளை மற்ற மாடுகளோடு சேர்த்து பராமரிக்கக் கூடாது. மாடுகளை அசுத்தமாக பராமரிக்கக்கூடாது. பண்ணையில் சாணத்தை கொட்டகைக்குள்ளேயை சேமித்து வைக்கக் கூடாது. மாடுகள் வெளிப்படுத்தும் நடவடிக்கைகளில் மாற்றம், தீவனம் உண்ணாமை மற்றும் நோய் அறிகுறிகளை புறக்கணிக்காமல் உடனடியாக கால்நடை மருத்துவர் கொண்டு சிகிச்சை அளிக்க வேண்டும்.

சினைப்பருவத்திலுள்ள மாடுகளை இயற்கை முறையில் கருத்தரிப்பு செய்யக்கூடாது. ஏனெனில் இயற்கை முறை கருத்தரிப்பு செய்வதால் கற்பப்பை நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. நோயுற்ற மாடுகளை மற்ற மாடுகளுடன் சேர்த்து வைக்கக் கூடாது. பிறந்த கன்றுகளை புறக்கணிக்கக் கூடாது. ஏனெனில் கன்றுகள் தான் கறவை மாட்டுப் பண்ணையின் எதிர்காலம் ஆகும். பிறந்தவுடன் 1 மணி நேரத்திற்குள் சீம்பால் கொடுக் காமல் விடக்கூடாது. கால் குளம்புகள் பராமரிப்பை தவிர்க்கக் கூடாது. கால் குளம்புகள் நீளமாக வளர்ந்தால், அது நடையைக் பாதிக்கும். அதனால் கால்குளம்புகளை 3-6 மாதத்திற்கு ஒரு முறை வெட்ட வேண்டும்.

கறவை மாடு பராமரிப்பு என்பது தீவனம் அளிப்பது மட்டுமல்ல, ஆரோக்கியம், சுத்தம், உடல்நிலை, இனப்பெருக்கம் அனைத் தையும் உள்ளடக்கியது. கறவை மாட்டுப் பண்ணையில் செய்ய வேண்டியவைகளையும் தவிர்க்க வேண்டியவைகளையும் முறையாக பின்பற்றுவதன் மூலம், கறவை மாட்டுப் பண்ணை யில் பால் உற்பத்தியும் மாடுகளின் ஆரோக்கியமும் அதிகரித்து அதிக இலாபம் பெற முடியும்.

தகவல் : **டாக்டர் இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பயறுவகைப் பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை முறைகள்

இந்நோய் பாசிப்பயறு மஞ்சள் தேமல் நச்சுயிரி என்ற கிருமியால் ஏற்படுகிறது. நோய் ஏற்படும் பருவத்தைப் பொருத்து விளைச்சல் இழப்பு 10 சதவிகிதம் முதல் 100 சதவிகிதம் வரை இருக்கும். இந்நச்சுயிரி துவரை, பச்சைப்பயறு, அவரை ஆகிய பயிர்களிலும் தோன்றும்.

**நோய் ஏற்படச் சாதகமான தட்பவெப்பநிலைகள்**

● வெள்ளை ஈ-யின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கும் சூழலில் வைரஸ் பரவுவதற்கு மிகவும் சாதகமாக இருக்கும்

**அறிகுறிகள்**

● முதலில் இளம் இலைகளில் சிறிய மஞ்சள் நிறப்புள்ளிகள் தோன்றும். இவை விரைவாக அளவில் பெரியதாகி, சிறிய மஞ்சள் நிறத் தேமல் அறிகுறிகளை உண்டாக்கும்.

● நாளடைவில் இலைகள் முழுவதும் மஞ்சளாகி விடும். பாதிக்கப்பட்ட பயிர்கள் தாமதமாக முதிர்ச்சியடையும்.

● குறைந்த அளவிலான பூக்கள் மற்றும் காய்களைக் கொண்டிருக்கும். காய்கள் அளவில் சிறியதாக உருமாறிக் காணப்படும்.

● பயிரின் ஆரம்ப வளர்ச்சிப் பருவத்தில் நோய் ஏற்பட்டால், விதைகள் உருவாகும் முன்பே செடிகள் இறந்துவிடும்.

நோய்க்காரணி மற்றும் பரவும் விதம்

● இந்நச்சுயிரி, வெள்ளை ஈக்கள் (பெமிசியா டெபாசி) மூலம் பரவுகிறது.

● இந்நச்சுயிரி, களைச் செடிகளான குரோடான் ஸ்பார்சி ப்ளோரஸ் (இரயில் பூண்டு), அகாலிபா இண்டிகா (குத்தி), எக்லிப்டா ஆல்பா (கரிசலாங்கன்னி) மற்றும் இதரப் பயறுவகைக் குடும்பத்தைச் சார்ந்த பயிர்களில் தங்கி வாழும் தன்மை உடையது.

**மேலாண்மை முறைகள்**

● தேமல் நோய் பாதிக்கப்பட்ட செடிகளை விதைத்த 45 நாட்கள் வரை அகற்ற வேண்டும். அதிகமான விதையளவு (25

கிலோ/எக்டர்) உபயோகிப்பதன் மூலம் பயிர்களின் எண்ணிக்கைக் குறையாமல் பார்த்துக் கொள்ளலாம். களைச் செடிகளை அகற்ற வேண்டும்.

● நோய் எதிர்ப்பு சக்தியுள்ள உளுந்து (வம்பன் 8, 10, 11 கோ 7 மற்றும் ஏடிடி 7) மற்றும் பாசிப்பயறு (வம்பன் 5, கோ 8 மற்றும் கோ 9) இரகங்களைப் பயிர் செய்யலாம்.

● கோடைக்காலத்தில் அதிகத் தாக்குதல் இருப்பதால், பெரிதும் தாக்குதலுககுட்படும் இரகங்களை ரபி பருவத்தில் பயிர் செய்யலாம்.

● அகற்றிய பயிரை எரித்தோ அல்லது சுடுநீரில் மூழ்கச் செய்தோ வைரஸை அழிக்க வேண்டும்.

● கலப்புப் பயிராக உளுந்து அல்லது பாசிப்பயறுப் பயிர்களுக்கிடையில் ஒவ்வொரு 15 வரிசைக்கு இடையில் இரண்டு வரிசை மக்காச்சோளம் (60 X 30 செ.மீ) அல்லது சோளம் (45 X 15 செ.மீ.) அல்லது கம்பு (45 X 15 செ.மீ) பயிரை சாகுபடி செய்யலாம்.

● மஞ்சள் நிற ஒட்டுப் பொறிகளை (12 எண்ணிக்கை/எக்டர்) பயன்படுத்தி வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்தலாம்.

● விதைகளைத் தயாமீதாக்ஷம் 25டபுள்யு.ஜி அல்லது இமிடாகுளோபிரிட் 70 டபிள்யு.எஸ் (4.0 கிராம்/கிலோ) பூச்சிக் கொல்லிகளைக் கொண்டு விதை நேர்த்திச் செய்ய வேண்டும்.

● நோயைப் பரப்பும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த, தயாமீதாக்ஷம் 25 டபிள்யு. ஜி (100 கிராம்/எக்டர்) அல்லது இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எஸ் (100 மி.லி./எக்டர்) அல்லது மீதைல் டெமடான் (2.0 மி.லி./லிட்டர்) அல்லது டைமீத்தோயேட் (20 மி.லி./லிட்டர்) தெளிக்கலாம் என சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

